இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 03.03.2026

# அரவிந்த் கெஜ்ரிவால் விடுதலை!

**சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை தனது பழிவாங்கும் அரசியலுக்கு மட்டுமே பா.ஜ.க. பயன்படுத்தி வருவதை அரவிந்த் கெஜ்ரிவால் வழக்கில் வந்திருக்கும் தீர்ப்பு அம்பலப்படுத்தி இருக்கிறது.**

முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதே டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். துணை முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதே டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டார். இதைப் பரப்புரை செய்தே டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. ஆனால் இப்போது என்ன நடந்துள்ளது? அனைவரையும் விடுதலை செய்து விட்டது சி.பி.ஐ. நீதிமன்றம்.

மூன்று மாதங்கள் சிறையில் இருந்தார் அரவிந்த் கெஜ்ரிவால். இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார் மணீஷ் சிசோடியா. இவர்கள் சிறையில் இருந்ததற்கு பரிகாரம் என்ன? இவர்கள் மீது அவதூறு கிளப்பி, அவமானப்படுத்தியதை எப்படி சீர்படுத்த முடியும்?

இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாது பா.ஜ.க. அவர்களுக்கு வேண்டியது எல்லாம், குறுகிய காலப் பலன்கள். அதற்காகத்தான் சி.பி.ஐ., அமலாக்கத்துறையை பயன்படுத்துவார்கள். நீதிமன்றத்தில் கொட்டு வாங்குவதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க. கவலைப்படுவது இல்லை. நீதிமன்றம் கேள்வி எழுப்பினால் வெட்கப்படுவதும் இல்லை.

அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்ட போது பிணை கேட்டு உச்சநீதிமன்றம் போனார். அப்போதே உச்சநீதிமன்றம் கடுமையான கேள்விகளை எழுப்பியது. **“டெல்லி கலால் கொள்கை வழக்கில் 100 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது என்றால் அந்தப் பணம் எங்கே? அதற்கான ஆதாரம் எங்கே?”** என்று கேட்டது உச்சநீதிமன்றம். அமலாக்கத்துறையால் ஆதாரத்தை தர முடியவில்லை. இருந்தால்தானே தருவார்கள்?

அமலாக்கத்துறை வழக்கறிஞரைப் பார்த்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள்.

**“நீதிமன்ற நடைமுறைகள் ஏதுமில்லாமல் சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் அமலாக்கத்துறை குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியுமா? இந்த வழக்கில் இதுவரை ஏதாவது சொத்து முடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? இந்த வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவால் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளார் என்பதை தெளிவுபடுத்த முடியுமா? கலால் கொள்கை வழக்கில் கைதான டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மணீஷ் சிசோடியாவின் வழக்கில், எந்த இடத்தில் வருகிறார்? கெஜ்ரிவால் ஜாமீன் கோருவதற்கு பதிலாக தனது கைது மற்றும் காவலில் வைத்ததற்கு எதிராக நீதிமன்றத்தை அணுகி இருக்கிறார். எனவே அவரை கைது செய்தற்கான அதிகாரம் அமலாக்கத்துறைக்கு இருக்கிறதா? தேர்தல் நேரத்தில் எதற்காக கைது செய்தீர்கள்?”** என்று நீதிபதிகள் கேள்விகள் எழுப்பினார்கள்.

டெல்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கானது 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நிலுவையில் இருக்கிறது. 2024 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதிதான் கெஜ்ரிவால் கைது செய்யப்படுகிறார். இத்தனை மாதமாக பயமுறுத்தி வந்துள்ளது பா.ஜ.க.. காங்கிரஸ் கட்சியுடன் அரவிந்த் கெஜ்ரிவால் கூட்டணி அமைக்க சம்மதித்துவிட்டார், அதில் உறுதியாக இருந்து விட்டார் என்று தெரிந்ததும் கைது செய்தார்கள்.

**“2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் கெஜ்ரிவாலுக்கு எதிரான ஆவணங்கள் தங்களிடம் இருப்பதாக அமலாக்கத்துறை சொல்லி வருகிறது. ஆனால் மக்களவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு 2024 மார்ச் 16 ஆம் தேதி வெளியானது. உடனே மார்ச் 21 ஆம் தேதி கைது செய்கிறார்கள்”** என்று அரவிந்த் கெஜ்ரிவாலின் வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி சொன்னார். அரசியல் நோக்கத்துக்காக மட்டுமே இக்கைது நடவடிக்கைகள் இருந்தன.

பா.ஜ.க.வின் கயமை முகத்திரையை கிழித்துள்ளது சி.பி.ஐ. நீதிமன்றம். டெல்லி மதுபானக் கைது வழக்கில் கைதான அரவிந்த் கெஜ்ரிவால், மணீஷ் சிசோடியா, தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகரராவின் மகள் கவிதா உள்ளிட்ட 23 பேரையும் விடுதலை செய்துள்ளது சி.பி.ஐ. நீதிமன்றம்.

டெல்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜிதேந்திர சிங் அளித்துள்ள 598 பக்க தீர்ப்பில் சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையையே ஏற்க மறுப்பதாகச் சொல்லி இருக்கிறார்.

**“இந்த விவகாரத்தில் குற்றவியல் சதி அல்லது நோக்கம் நிரூபிக்கப்படவில்லை. எந்தவொரு நேரடிப்பணப் பரிமாற்றமோ அல்லது சதித்திட்டமோ நிரூபிக்கப்படவில்லை. பொது ஊழியர்கள் தொடர்பான கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு வலுவான ஆதாரங்கள் தேவை. ஆவணங்கள், சாட்சிகளை நம்பாமல் ஊகங்களை சி.பி.ஐ. நம்பி இருக்கிறது”** என்று நீதிபதி சொல்லி இருக்கிறார். ஒரு ஆதாரத்தைக் கூடத் தரவில்லை என்று சொல்லி இருக்கிறார் நீதிபதி.

சி.பி.ஐ.யை கடுமையாக கண்டித்துள்ளது நீதிமன்றம். **“சி.பி.ஐ. தனது ஓட்டைகளை மறைக்க அப்ரூபவர்களை மட்டுமே நம்பியது கவலை அளிக்கிறது. இது அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய தனிநபர் சுதந்திரத்துக்கு எதிரானது. இந்த விவகாரத்தில் சி.பி.ஐ.யின் விசாரணை அதிகாரிக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்”** என்றும் நீதிபதி உத்தரவிட்டு உள்ளார்.

**“ஆம் ஆத்மி கட்சியை முடக்க பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தீட்டிய தந்திர வியூகமே இந்த மதுபானக் கொள்ளை வழக்கு”** என்று அரவிந்த் கெஜ்ரிவால் சொல்லி இருக்கிறார். அதனை உறுதி செய்யும் வகையில் சி.பி.ஐ. நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்துள்ளது.

**“எந்த ஆதாரமும் இல்லை என்றால் முன்பு குற்றச்சாட்டு பதிவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது ஏன்?” என்று சி.பி.ஐ. நீதிமன்றத்தையே மிரட்டி இருக்கிறார் பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் சுதான்ஷூ திரிவேதி. பா.ஜ.க.வின் தலைமை அலுவலகத்தில் வைத்து கொடுத்த பேட்டியில் இப்படிச் சொல்லி இருக்கிறார். இவர்கள் நீதிமன்றத்தையே வெளிப்படையாக மிரட்டுகிறார்கள்.**

**பழிவாங்குதல் ஒன்றே பா.ஜ.க.வின் பாதை. அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி அது மட்டும்தான்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முகாம் அலுவலகத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். உடன் இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. தாயகம் கவி எம்.எல்.ஏ.. அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

### ‘என்னால் முடியும்’ என்ற மந்திரச் சொல்லை மனதில் வைத்து

# தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள்!

## 10 மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

***சென்னை, மார்ச் 3 -***

***‘என்னால் முடியும்’ என்ற மந்திரச் சொல்லை மனதில் வைத்து, தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தேர்வு எழுத உள்ள 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.***

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை எழுதவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு :-

தமிழ்நாட்டில் மாணவச் செல்வங்களுக்கான மேல்நிலை பொதுத் தேர்வு 02.03.2026 அன்று முதலும், பத்தாம் வகுப்புத் பொதுத்தேர்வு 11.03.2026 முதலும் தொடங்க இருக்கிறது. மேல்நிலைத் தேர்வை 7,99,692 மாணவ மாணவியரும் பத்தாம் வகுப்புத் தேர்வை 8,82,806 மாணவ, மாணவியரும் எழுத உள்ளனர்.

உயர்கல்வியே எங்கள் இலக்கு என்னும் உறுதியோடு ஆண்டு முழுவதும் ஊக்கத்தோடு படித்து உங்கள் குறிக்கோளின் நுழைவு வாயிலான மேல்நிலை/பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுத உள்ளீர்கள். கருத்தாய்ப் படித்து கல்விக் கடமையாற்றி அதன் பலன் கனியும் காலமிது.

“என்னால் முடியும்” என்னும் மந்திரச் சொல்லை மனதில் பதியுங்கள். அறிவில் தெளிவும், மனதில் துணிவும், செயலில் உறுதியும் இருந்தால் தேர்வு பற்றிய அச்சம் தேவையில்லை. தேர்வுகளை முனைப்புடனும், முழு கவனத்துடனும் எழுதுங்கள். இக்காலத்தில் உங்கள் உடல் நலனும் மன நலனும் மிகவும் அவசியமானது. சத்தான உணவும், போதுமான தூக்கமும், மன அமைதியும் தேர்வுகளை எதிர்கொள்ளத் துணை நிற்கும். நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும், பதற்றமின்றியும் தேர்வை அணுகுங்கள். உங்கள் இலட்சியப் பாதையில் சிறிது தளர்ச்சி வந்தாலும் பதற்றமின்றி முயற்சி செய்யுங்கள்.

உழைப்பிற்கு ஏற்ற பலனை நிச்சயம் அடைவீர்கள். ஒவ்வொருவருக்குமான வாய்ப்பு பரந்து விரிந்து கிடக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் உயர் கல்வி இலக்கினை அடைய புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் போன்ற சிறப்பான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அன்புக் குழந்தைகளே! மனவலிமையும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் உங்கள் வெற்றிப்பாதைக்கான படிக்கட்டுகள். தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள். உங்கள் உயர்வு தமிழ்நாட்டின் வளர்ச்சி. தேர்வு எழுதும் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் அனைவரும் சிறப்பான வெற்றி பெற என் உளப்பூர்வமான வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### அமெரிக்கா, இஸ்ரேல் – ஈரான் இடையே போர் பதற்றம்:

# வளைகுடா தமிழர்களின் பாதுகாப்புக்கு உடனடி நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 3-**

**அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் பதற்றத்தினால் வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் - இடையே தற்போது ஏற்பட்டுள்ள போர் காரணமாக ஈரான் மற்றும் அதனை சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இதன் காரணமாக அங்கு உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை கருதி, தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும், முடிந்தவரை வீட்டிலேயே பாதுகாப்பாக இருக்கவும், இந்திய தூதரகம் வெளியிடும் அறிவுறுத்தலின்படி செயல்படவும் இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், நான், தமிழ்நாடு முதலமைச்சராக, வளைகுடா நாடுகளில் வசித்து வரும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். அங்குள்ள தமிழர்களின் நிலைமையை உடனுக்குடன் அறிந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்திலும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது

தமிழ்நாடு அரசு, அங்குள்ள தமிழர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, நிலைமையை கண்காணித்து வருகிறது. மேலும் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.

போர் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்களுக்கு ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், அவர்கள் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் 24/7 கட்டணமில்லா உதவி எண்களை அல்லது புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் கட்டுப்பாட்டு அறையினை தொடர்புகொள்ளலாம்.

மேலும், தங்கள் பகுதிகளில் உள்ள இந்திய தூதரகம் வெளியிடும் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதுதில்லி கட்டுப்பாட்டு அறையின் உதவி எண்கள்

01124193300 (Land line)

92895 16712 (Mobile Number with Whatsapp)

அயலகத் தமிழர் நலத்துறையின் உதவி எண்கள்:

இந்தியாவிற்குள்-1800 309 3793

வெளிநாடு - +91 80 6900 9900 (Missed Call)

தொடர்புக்கு- +91 80 6900 9901

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவாகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவாரூர் மாவட்டம், பரப்புரை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் தயாநிதிமாறன் எம்.பி. திருத்துறைப்பூண்டியில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், கர்மவீரர் காமராசர் ஆகியோர் சிலைகளுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் ஆ.எஸ்.பாண்டியன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என்.ராஜா, ஓ.கே.விமல், இளவரசன், முகில்ராஜேந்திரன், சிக்கந்தர் மற்றும் பலர் உள்ளனர்.